<u>தேசிய சேவைக்கான பதிவு</u>

1. படைக்கு ஆள்சேர்க்கும் சட்டத்தின் பிரிவு 3 வழங்கும் அதிகாரச் சக்தியின் அடிப்படையில், 1 அக்டோபர் 2004 தேதிக்கும் 1 ஜனவரி 2005 தேதிக்கும் இடையில் (இரு தேதிகளும் உள்ளடங்கும்) பிறந்த ஒவ்வொரு சிங்கப்பூர் ஆண் குடிமகனும் ஒவ்வொரு சிங்கப்பூர் ஆண் நிரந்தரவாசியும் (இந்த அறிவிப்பில் பதிவு செய்பவர் என்றழைக்கப்படுபவர்) தேசிய சேவைக்குப் பதிவு செய்வது அவசியமென்பதை அதிகார அமைப்பு தெரிவித்துக் கொள்கிறது.

2. பதிவு செய்பவர் 17 நவம்பர் 2021 தேதிக்கும் 7 டிசம்பர் 2021 தேதிக்கும் இடையில் (இரு தேதிகளும் உள்ளடங்கும்) தேசிய சேவைக்குப் பதிவு செய்தாக வேண்டும் -

(*a*) https://www.ns.sg இணையத்தளத்தில் பதிவு செய்யலாம்; அல்லது

(*b*) 3 டெப்போ சாலை, சிங்கப்பூர் 109680 எனும் முகவரியில் அமைந்திருக்கும் மத்திய ஆள்பலத் தளத்திற்கு (CMPB) நேரடியாகச் சென்று பதிவு செய்யலாம்.

3. (1) பதிவு செய்பவர் ஒவ்வொருவரும் -

(*a*) பதிவு செய்யும்போது, தனது மருத்துவப் பரிசோதனைக்கு 7 ஜனவரி 2022 தேதிக்கும் 11 பிப்ரவரி 2022 தேதிக்கும் இடையில் (இரு தேதிகளும் உள்ளடங்கும்) ஒரு தேதியைக் குறைக்கவேண்டும்; அதோடு

(*b*) குறிக்கப்பட்ட தேதியில் தனது மருத்துவப் பரிசோதனைக்காகக் காலை 8 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையில் மத்திய ஆள்பலத் தளத்திற்குச் செல்லவேண்டும்.

(2) ஆனால், பதிவு செய்பவர் பத்தி 4(1)-ன்கீழ் விண்ணப்பம் செய்து, அந்த விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், துணை பத்தி (1) பொருந்தாது.

4. (1) பதிவு செய்பவர் எவரும், தேசிய சேவைக்கான பதிவைத் தொடங்கிய பிறகு, ஆனால் தேசிய சேவையைத் தொடங்குவதற்கு முன்பு, சிங்கப்பூரில் தனது கல்வியை முடிப்பதற்காக ஆள்சேர்ப்புக்குச் செல்லவேண்டிய பொறுப்பை ஒத்தி வைக்க விண்ணப்பம் செய்யலாம்.

(2) துணை பத்தி (1)-ன்கீழ் விண்ணப்பம் செய்தாக வேண்டும் -

(*a*) https://www.ns.sg இணையத்தளத்தில் பதிவு செய்யலாம்; அல்லது

(*b*) மத்திய ஆள்பலத் தளத்தின் போடியத்திற்கு நேரடியாகச் சென்று பதிவு செய்யலாம்.

(3) பதிவு செய்பவர் துணை பத்தி (1)-ன்கீழ் செய்த விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், பதிவு செய்பவர் எப்போது ஆள்சேர்ப்புக்கும் மருத்துவப் பரிசோதனைக்கும் செல்லவேண்டும் என்பது பற்றிய அறிக்கையை அதிகார அமைப்பிடமிருந்து பிற்பாடு பெறுவார்.

| | |
|---|---|
| இடம்: | மத்திய ஆள்பலத் தளம்<br>CMPB - போடியம்<br>3 டெப்போ சாலை<br>சிங்கப்பூர் 109680 |
| செயல்படும் நேரம்: | திங்கள் முதல் வெள்ளி - காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி<br>சனிக்கிழமை - காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி<br>ஞாயிற்றுக்கிழமையும் பொது விடுமுறை நாட்களும் மூடியிருக்கும் |
| விவரம் கேட்டறிய: | 1800-3676767 |
| மின்னஞ்சல்: | contact@ns.sg |
| இணையத்தளம்: | https://www.ns.sg |